**கவனிக்க.-** 15.10.2010 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.

**கவனிக்க.-** இவ்வர்த்தமானியின் பகுதி VI இல் 2010 ஆம் ஆண்டிற்கான பலப்பிட்டி நீதிமன்ற வலயத்தினில் யூரிமார் மற்றும் விசேட யூரிமார் (சிங்கள மற்றும் ஆங்கில மொழியில் மட்டும் கடமையாற்றும்) பட்டியலொன்று பிரசுரிக்கப்படுகின்றது.

**கவனிக்க.-** இவ்வர்த்தமானியின் பகுதி IV (அ) மற்றும் பகுதி IV (ஆ) ஆகியன சிங்கள மற்றும் ஆங்கில மொழியில் தனியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1677 - 2010 ඔක්තෝබර් මස 21 වැනි බ්‍රහස්පතින්දා - 2010.10.21

1677 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 21 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - | கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 1478 | நானாவித அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - | | - |
| பதவிகள் - வெற்றிடம் | - | | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை - நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களாவன, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனையும் கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2010, ஒற்றோபர் மாதம் 29 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, ஒற்றோபர் மாதம் 15 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# மாகாண சபை அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மத்திய மாகாண மாகாண சபை**

*மத்திய மாகாண மாகாண சபையின் உத்தேச கிராமிய அபிவிருத்தி நியதிச்சட்ட சட்டமூலம்*

*மத்திய மாகாணத்தில் மாகாண சபையில் நடைமுறைப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள மேற்படி நியதிச்சட்டத்தின் சட்டமூலத்தை பொதுமக்களின் கருத்துக்களை பெற்றுக்கொள்ளும் பொருட்டு கீழே பிரசுரிக்கின்றேன்.*

*இவ்வறிவித்தல் வர்த்தமானி பத்திரிகையில் வெளியாகி 10 தினங்கள் கடந்து சென்ற பின்பு இச்சட்டமூலம் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளும் பொருட்டு மத்திய மாகாண சபையில் சமர்ப்பிக்கப்பட உள்ளது என்பதை அறியத்தருகின்றேன். இப்பிரகடனத்தில் உள்ள விடயங்கள் தொடர்பாக ஏதாவது கருத்தை சமர்ப்பிக்க விரும்பினால் இவ் அறிவித்தல் வெளியாகி 10 தினங்களுக்குள் அவ் விடயங்கள் தொடர்பாக கருத்துக்களை எழுத்து மூலமாக எனக்கு அறியத்தருதல் வேண்டும்.*

*(திருமதி) அனுஷியா சிவராஜா,*
*கைத்தொழில், விளையாட்டு, மகளிர்*
*விவகார, கிராமிய அபிவிருத்தி,*
*தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள்*
*அபிவிருத்தி, இந்து கலாசார, இளைஞர்*
*விவகார மற்றும் கல்வி (தமிழ்) அமைச்சர்.*

*கைத்தொழில், விளையாட்டு, மகளிர் விவகார,*
*கிராமிய அபிவிருத்தி, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள்*
*அபிவிருத்தி, இந்து கலாசார, இளைஞர் விவகார மற்றும்*
*கல்வி (தமிழ்) அமைச்சு,*
*த. பெ. இல. 41, கெட்டெம்பே,*
*பேராதனை.*

***மத்திய மாகாண மாகாண சபையின் 2010 ஆம் ஆண்டு ....................... இலக்கம் கொண்ட கிராம அபிவிருத்தி வரைவு நியதிச் சட்டம் – சுருக்கம்***

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பின் 13 ஆவது அரசியல் யாப்புத் திருத்தச் சட்டத்தின் ஒன்பதாவது உப பிரிவின் 1 ஆவது பட்டியலின் (மாகாண சபைகள் பட்டியலில்) 10 ஆம் இலக்கத்தின்கீழ் அதிகாரமளிக்கப்பட்ட கிராம அபிவிருத்திச் சங்க விடயத்திற்குட்பட்ட மத்திய மாகாணத்துக்கான கிராம அபிவிருத்தித் திணைக்களத்தை நிறுவுதல், மத்திய மாகாணத்துக்குள் கிராம அபிவிருத்திச் சங்கங்களைப் பதிவுசெய்தல் மற்றும் அவற்றை நடாத்திச் செல்லுதல், கிராம அபிவிருத்திப் பேரவைகள். மாகாணப் பேரவைகள் என்பவற்றை நிறுவுதல், பதிவுசெய்தல் மற்றும் அவற்றை நடாத்திச் செல்லுதல், மகளிர் அபிவிருத்தி நிலையங்களை நிறுவுதல் மற்றும் அவற்றை நடாத்திச் செல்லத் தேவையான விதிமுறைகளை ஏற்பாடு செய்தல் என்பன உள்ளிட்ட மத்திய மாகாண கிராம அபிவிருத்தி மற்றும் அதனுடன் தொடர்புபட்ட பிரித்தெடுத்த அம்சங்களுக்கான விதிமுறைகளை ஏற்பாடு செய்வதற்கான வரைவு நியதிச்சட்டமாகும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பின் மத்திய மாகாணத்தின் மாகாண சபையினால் இவ்வாறு பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது :*

*குறுகிய பெயரும் அமுலாக்கும் திகதியும்.*

*இந்த வரைவு நியதிச் சட்டம் மத்திய மாகாண சபையின் 2010 ஆம் ஆண்டின் .................................... இலக்கம் கொண்ட கிராம அபிவிருத்தி வரைவு நியதிச்சட்டம் எனக் கொள்ளப்படுவதுடன் மதிய மாகாணத்தின் ஆளுநர் அவர்களது அங்கீகாரத்தைப் பெற்ற தினத்திலிருந்து இது செயற்பாட்டுக்கு வரும்.*

***பகுதி - I***

*கிராம அபிவிருத்திச் சங்கம் ஒன்றை அமைத்தல்.*

*1. மத்திய மாகாணத்தினுள் கிராம அபிவிருத்தியுடன் தொடர்பான கருமங்களைச் செயற்படுத்துவதற்காக மத்திய மாகாண சபையின் கிராம அபிவிருத்தித் திணைக்களமொன்றை நிறுவுதல் வேண்டும்.*

*மாகாணப் பணிப்பாளரை நியமித்தல்.*

*2. (i) இந்த வரைவு நியதிச்சட்டத்தில் காட்டப்பட்டுள்ள நோக்கங்களை எய்துவதற்காக மத்திய மாகாண, மாகாண சபையின் கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் கிராம அபிவிருத்தி மாகாணப் பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்படுதல் வேண்டும். அவர் அந்தத் திணைக்களத்தின் தலைவராக இருத்தல் வேண்டும். அவர் இலங்கை நிருவாக சேவையின் அலுவலராகவும் இருத்தல் வேண்டும்.*

(ii) மாகாண கிராம அபிவிருத்திச் சங்க பணிப்பாளரை நியமித்தல் மத்திய மாகாண சபையின் பொதுவான ஆட்சேர்ப்பு மற்றும் நியமிக்கும் சட்டத்திட்டங்களுக்கு இணங்க மற்றும் அதற்கான அதிகாரமுள்ள நியமன அதிகாரமுள்ளவரால் செயற்படுத்தப்படும்.

3. இந்த வரைவு நியதிச் சட்டத்தில் காட்டப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றுவதற்கென கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளருக்கு உதவக்கூடிய ஏனைய அலுவலர்களும் பணியாட்களும் நியமிக்கப்படுதல் வேண்டும். மாகாணப் பணிப்பாளரது கடமைகள் பொறுப்புக்கள் அதிகாரங்கள் இந்த அலுவலர்களுக்குச் சாட்டுதல் செய்யப்படலாம். *திணைக்களத்தின் ஏனைய அலுவலர்களை நியமித்தலும் அவர்களது கடமைகளும் பொறுப்புக்களும்.*

## *பகுதி - II*

### நோக்கங்களும் கருமங்களும்

4. கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் நோக்கங்களையும் கருமங்களையும் பயனுறச் செய்வதற்குத் தேவையானவை எனக் கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் தேவையான ஏற்பாடுகளைச் செய்வதற்கும் ஏற்றவாறு வரைவு நியதிச் சட்டத்தின் பின்வரும் அம்சங்களைச் செயற்படுத்துவது இத்திணைக்களத்தின் கருமங்களாக அமையும் :- *திணைக்களத்தின் குறிக்கோள்களும் கடமைகளும்.*

(i) கிராமிய மக்களது சமூக, பொருளாதார, கலாசார, விவசாய உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்திக்கென இனங்காணப்பட்ட வேலைத்திட்டங்களைச் செயற்படுத்துதல்.

(ii) கிராம அபிவிருத்திச் சங்கங்கள், கிராம அபிவிருத்திப் பிராந்தியப் பேரவைகள், கிராம அபிவிருத்தி மாவட்டப் பேரவைகள், கிராம அபிவிருத்தி மாகாணப் பேரவை என்பவற்றை நிறுவுதல், ஏற்பாடு செய்தல், பதிவு செய்தல் மற்றும் யாப்புக்கு ஏற்றவாறு நடாத்திச் செல்லுதல்.

(iii) கிராமிய மகளிர் அபிவிருத்தி நிலையங்களைத் தாபித்தலும் நடாத்திச் செல்லுதலும்.

(iv) மாகாண சபையின் அங்கீகாரத்துடன் தேவையேற்படும் சந்தர்ப்பங்களின்போது கிராம அபிவிருத்திக்கான நிதியத்தைக் கட்டியெழுப்புதல்.

(v) சனசமூக செயற்றிட்டங்களுக்கெனக் கிராமிய தலைமைத்துவத்தை வலுப்படுத்தும் பயிற்சித் திட்டங்களை ஏற்பாடு செய்தலும் நடாத்துதலும்.

## *பகுதி - III*

### கிராம அபிவிருத்திச் சங்கங்களும் பேரவைகளும்

5. பிரதேச செயலாளர் பிரிவொன்றில் அமைந்துள்ள எல்லா கிராம அபிவிருத்திச் சங்கங்களதும் கூட்டிணைப்புடன் மத்திய மாகாணத்தின் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் ஒரு பிராந்தியப் பேரவை வீதம் அமையப்பெறும். மாவட்டத்தில் அமைந்துள்ள அனைத்துப் பிராந்தியப் பேரவைகளதும் அந்த மாவட்டதின் அனைத்து கிராம அபிவிருத்திச் சங்கங்களதும் கூட்டிணைப்புடன் கிராம அபிவிருத்தி மாவட்டப் பேரவை அமையும். இவ்வாறு அமைக்கப்படும் கண்டி, மாத்தளை, நுவரெலியா மாவட்டப் பேரவைகளதும் மத்திய மாகாணத்தின் அனைத்து கிராம அபிவிருத்திச் சங்கங்களதும் கூட்டிணைப்புடன் மத்திய மாகாண கிராம அபிவிருத்திப் பேரவை அமையும். இந்த வரைவு நியதிச் சட்டத்தின்படி அமைக்கப்படும் கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கும் பிராந்தியப் பேரவைகளுக்கும் மாவட்டப் பேரவைகளுக்கும் மாகாணப் பேரவைகளுக்கும் எனத் தனித்தனியான நான்கு யாப்புக்கள் இருத்தல் வேண்டும். இந்த யாப்புக்கள் கிராம அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் மூலம் தயாரிக்கப்பட்டு மத்திய மாகாணத்தின் கௌரவ அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் செயற்படுத்தப்படுதல் வேண்டும். *கிராம அபிவிருத்திச் சங்கங்களதும் பேரவைகளதும் யாப்புக்கள்.*

6. இவ்வாறான சங்கங்களதும் பேரவைகளதும் அதிகார எல்லைகள் கருமங்கள் மற்றும் ஏனைய அனைத்து நடவடிக்கைகளும் உரிய யாப்புக்கு அமைய நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

7. கிராம அபிவிருத்திச் சங்கங்களையும் பிராந்திய பேரவைகளையும் பதிவு செய்யும் அதிகாரம் பிரதேச செயலாளருக்கும், மாவட்டப் பேரவையையும் மாகாணப் பேரவையையும் பதிவு செய்யும் அதிகாரம் கிராம அபிவிருத்தி அமைச்சின் செயலாளருக்கும் உண்டு. *சங்கங்களையும் பேரவைகளையும் பதிவுச்செய்தல்.*

அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களதும் பேரவைகளதும் யாப்பு விரோத நடவடிக்கைகள்.

8. உரிய யாப்புக்கு எதிராகச் செயற்படுகின்றதென்ற முறைப்பாட்டின் பேரில் முறையான விசாரணையொன்றின் பின் குற்றவாளியாக அல்லது போதியளவு சான்றுகள் உள்ளனவென உறுதிப்படுத்தும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் உரிய சங்கம் அல்லது பிராந்திய பேரவை கலைத்துவிடும் அதிகாரம் உரிய பிரிவின் பிரதேச செயலாளருக்கும், மாகாண மற்றும் மாவட்டப் பேரவைகளைக் கலைத்துவிடும் அதிகாரம் அமைச்சின் செயலாளருக்கும் உண்டு –

(i) மேற்குறித்த அம்சங்கள் தொடர்பாக பிரதேச செயலாளர் தீர்மானத்துக்கு எதிராக உரிய சங்கம் 14 நாட்களுக்குள் அமைச்சின் செயலாளருக்கு மேன்முறையீடு செய்ய முடியும். தமது முடிவைச் செயலாளர் 30 நாட்களுக்குள் வழங்குவார். செயலாளரது முடிவே இறுதித் தீர்வாக அமையும்.

(ii) மேலே குறிப்பிட்ட செயற்குழு கலைக்கப்பட்ட சங்கத்தின் அல்லது பேரவையின் பதிவைச் செயலிழக்கச் செய்யும் அல்லது மீளப் புனரமைக்கும் செயன்முறையை மேற்கொள்ளும் அதிகாரம் கிராம அபிவிருத்திச் சங்கமெனின் உரிய பிரதேச செயலாளருக்கும், பிராந்திய அல்லது மாவட்டப் பேரவையெனின் அல்லது மாகாணப் பேரவையெனின் அமைச்சின் செயலாளருக்கும் உண்டு.

மோசடிகள் மேற்கொண்ட சங்கங்களுக்கும் பேரவைகளுக்கும் எதிராக மேற்கொள்ளும் நடவடிக்கைகள்.

09. (i) சங்கமொன்றின் அல்லது பேரவையொன்றின் நிதி மற்றும் சொத்துக்களில் குறைபாடு ஏற்படும்போது முறையான விசாரணை ஒன்றை மேற்கொண்டு உரிய நிதியையோ அல்லது சொத்தின் பெறுமதியையோ அறவிட்டுக்கொள்ளப் பணிப்பாளர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ii) இந்த வரைவு நியதிச்சட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட நிதி அல்லது சொத்துக்கள் மோசடி தொடர்பாக நீதிமன்றம் செல்லும் அதிகாரம் பிரதேச செயலாளர் அல்லது மாகாண பணிப்பாளர் அல்லது அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ளது.

(iii) கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு, பிராந்திய பேரவைக்கு, மாவட்டப் பேரவையில் தனக்களிக்கப்பட்ட பதவியிலிருந்து ஒதுங்கிய போதிலும் தலைவர், செயலாளர், பொருளாளருக்கு தான் கடமையிலிருந்து காலத்திற்குள் ஏற்பட்ட நிதி மற்றும் சொத்துக்களின் மோசடிகள் பற்றி பொறுப்புக் கூறவேண்டும். அப்பதவியில் இருந்தவர் திடீர் மரணமடையும் போது அவரின் சொத்துக்களுக்கு உரிமைகோருபவர்களிடமிருந்து அதன் நட்டத்தை அறவிடவேண்டும்.

## பகுதி - IV

## பொது ஏற்பாடுகள்

நியதிச் சட்டத்துடன் தொடர்பான சட்டப் பிரமாணங்களை விதித்தல்.

10. வரைவு நியதிச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை எய்தத் தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கெனத் தேவைக்கேற்றவாறு சட்டங்களை விதிக்கும் அதிகாரத்தை உரிய விடயப் பொறுப்பு அமைச்சர் அவர்கள் கொண்டுள்ளார்.

சட்டப்பிரமாணங்களது செல்லுபடிக் காலம்.

11. மேற்குறித்த 10 ஆவது பந்தியின் கீழ் விதிக்கப்படும் ஒவ்வொரு சட்டவிதியும் அமைச்சர் மூலம் குறித்துரைக்கப்படும் திகதியிலிருந்து செல்லுபடியாகுதல் வேண்டும்.

சிங்கள வாசகங்களே வலிமை பெறும்.

12. இந்த வரைவு நியதிச் சட்டத்தின் சிங்கள, தமிழ், ஆங்கில வாசகங்களிடையே ஏதும் கருத்து மயக்கம் தோன்றும் பட்சத்தில் சிங்கள வாசகங்களின் கருத்துக்களே மேலோங்கி நிற்கும்.

## பகுதி - V

## கருத்து விளக்கம்

சொற்பிரயோக விளக்கம்.

13. (i) "ஆளுநர்" எனப்படுவது மத்திய மாகாணத்தின் ஆளுநர் அவர்களைக் குறிப்பிடும்.

(ii) "அமைச்சர்" எனப்படுவது மத்திய மாகாண சபையின் கிராம அபிவிருத்திக்குப் பொறுப்பான அமைச்சரைக் குறிப்பிடும்.

(iii) "அமைச்சின் செயலாளர்" எனப்படுவது மத்திய மாகாண சபையின் கிராம அபிவிருத்திக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளரைக் குறிப்பிடும்.

(iv) "மாகாணப் பணிப்பாளர்" எனப்படுவது மத்திய மாகாண கிராம அபிவிருத்தி மாகாணப் பணிப்பாளர் அல்லது அவர் மூலம் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரைக் குறிப்பிடும்.

(v) “பிரதேச செயலாளர்” எனப்படுவது மத்திய மாகாணத்தில் அமைந்துள்ள பிரதேச செயலாளர் பிரிவு ஒன்றை செயற்படுத்தும் பிரதேச செயலாளரோ அல்லது அவரின் அதிகாரமளிக்கப்பட்ட ஒருவர்.

(vi) “சங்கம்” எனப்படுவது மத்திய மாகாணத்துக்குள் செயற்படும் அபிவிருத்திச் சங்கத்தைக் குறிப்பிடும்.

(vii) “பேரவை” எனப்படுவது மத்திய மாகாணத்துக்குள் செயற்படும் கிராம அபிவிருத்திப் பிராந்தியப் பேரவைகளையும், கிராம அபிவிருத்தி மாவட்டப் பேரவைகளையும் கிராம அபிவிருத்தி மாகாணப் பேரவையையும் குறிப்பிடும்.

(viii) “சொத்துக்கள்” எனப்படுவது கிராம அபிவிருத்திச் சங்கம் அல்லது பேரவைக்குச் சொந்தமான ஏடுகள், ஆவணங்கள், காசுக் கையிருப்பு, வங்கியிலிட்ட பணம், தளபாடங்கள் உபகரணங்கள், கட்டடங்கள், காணி, செயற்றிட்டங்கள் மற்றும் ஏனைய அசையும், அசையாச் சொத்துக்கள் அனைத்தையும் குறிப்பிடும்.

10-717

---

**இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் ஊவா மாகாண மாகாண சபை**

ஊவா மாகாணத்தின் மாகாண சபை

**ஊவா மாகாண மாகாண சபையால் பிரேரிக்கப்பட்ட கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் விஞ்ஞாபனம்**

ஊவா மாகாணத்தின் மாகாண சபைக்குள் செயற்படுத்தவதற்காக உத்தேசித்துள்ள மேல் குறிப்பிடப்பட்டுள்ள நகல்வரைவு விஞ்ஞாபனத்தை பொது மக்களின் கருத்துகளை அறிந்து கொள்வதற்காக கீழே பிரசுரிக்கின்றேன்.

இந்த அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு 10 நாட்களின் பின் ஊவா மாகாண, மாகாண சபையின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்படும். இந்த விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக ஏதேனும் கருத்துக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றால் இந்த அறிவித்தலின் பின் 10 நாட்களுக்குள் அந்த கருத்துக்களை எழுத்து மூலம் கீழ்காணும் எனது முகவரிக்கு அறிவிக்கவும்.

ஆர். எம். குமாரசிரி ரத்நாயக,
வீதி அபிவிருத்தி, வீடு, நீர்வழங்கல்,
நுகர்வோர் செயற்பாடு, கூட்டுறவு, உணவு
விநியோகம் மற்றும் பகிர்ந்தளித்தல் அமைச்சர்,
ஊவா மாகாண மாகாண சபை.

வீதி அபிவிருத்தி, வீடு, நீர்வழங்கல், நுகர்வோர் செயற்பாடு,
கூட்டுறவு, உணவு விநியோகம் மற்றும் பகிர்ந்தளித்தல் அமைச்சு அலுவலகம், (ஊ. மா.)
இலக்கம் 301, ஆர். எச். குணவர்தன மாவத்தை,
பதுளை,
2010.10.05.

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஊவா மாகாண மாகாண சபை**

**ஊவா மாகாண மாகாண சபை உத்தேச கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு திட்டக்குறிப்பு**

ஊவா மாகாணத்தில் வாழும் மக்களுக்கு நியாயமானதும் நேர்மையானதுமான சேவையை வழங்குவது ஊவா மாகாண சபையின் பொறுப்பு என்பதால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு சட்டத்தின் பதிமூன்றாம் திருத்தத்தின் மூலம் மாகாண சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி ஊவா மாகாணத்திற்குள் திறன்மிக்கதும், பலன்தரக்கூடியதுமான கூட்டுறவு முறையை நிறுவும் குறிக்கோளுடன் கூட்டுறவு பணியில் ஈடுபட்டிருக்கும் ஊழியர்களையும் மற்றும் அதிகாரிகளை நியமித்தல், பதவி உயர்த்தல், பணிநீக்கம் செய்தல், ஒழுக்கத்தை பேணுதல், சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை வழங்குதல், போன்றவைகளை நிறுவுவதற்கு தேவையான சட்டசெயற்பாடுகளை மேற்கொள்ளுவதற்கும் அதனுடன் இணைந்த விடயங்களுக்கான நியதிகளை உருவாக்குவதற்கான நியதிச்சட்டமாகும். இந்த நியதிச்சட்டம் 1972 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சட்டத்திற்கும் மற்றும் அதற்காக ஏற்படுத்தப்பட்ட திருத்தங்களுக்கும் ஏற்புடையதாகும்.

முகவுரை.

செயற்றிறனுடன் பலனளிக்கக்கூடியதுமான நம்பிக்கையுடைய சிறந்த கூட்டுறவு பணியை முன்னெடுத்து செல்வதனூடாக ஊவா மாகாண மக்களின் சமூக பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கு ஊவா மாகாண சபை கடமைப்பட்டிருப்பதால் ;

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் ஊவா மாகாண சபை இவ்வாறு பிரகடனப்படுத்துகிறது.

சுருக்கப் பெயர்.

1. இந் நியதிச்சட்டம் ஊவா மாகாண சபையின் மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு நியதிச்சட்டம் என அழைக்கப்படும்.

செயற்படும் திகதி.

2. இந் நியதிச்சட்டத்தின் இதன் பின் “ஆளுநர்” என அழைக்கப்படும் ஊவா மாகாண ஆளுநர் அவர்களின் அங்கீகாரம் அளிக்கப்பட்ட நாளிலிருந்து அல்லது ஆளுநர் அவர்களின் நிர்ணயிக்கப்பட்ட நாளிலிருந்து அமுலுக்கு வரும்.

## பகுதி - I

### ஊவா மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவை நிறுவுதலும், அதன் அதிகாரங்களும் செயற்பாடுகளும்

ஊவா மாகாண கூட்டுறவு ஆணைக்குழுவை நிறுவுதல்.

3. இந் நியதிச்சட்டத்தின் பணிகளை நிறைவேற்றுவதற்காக இதன் பின் “ஆணைக்குழு” என அழைக்கப்படும் ஊவா மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு நிறுவப்படும்.

சட்டத்துடன் இணைந்ததாக இருத்தல் வேண்டும்.

4. ஆணைக்குழு பிளவுபடாத சந்ததியாகவும் பொது முத்திரையுடனான, சட்டபூர்வமான கூட்டுத்தாபனமாகவும் அதன் சட்டத்துடன் இணைந்திருப்பதுடன், அந்த நிலையிலிருந்து அது வழக்கு தொடுப்பதற்கும் அதற்கு எதிராக வழக்கு தொடுப்பதற்கும் மற்றும் வழக்கு தொடுக்கக்கூடியதுமானதாகவும் இந் நியதிச்சட்டத்தின் ஊடாக செய்யவேண்டிய அனைத்தையும் செய்வதற்குமான அதிகாரமுடையதாகவும் சட்டத்துடன் இணைந்ததாக இருத்தல் வேண்டும்.

ஆணைக்குழுவின் சேர்வுகள்

5. (1) ஆணைக்குழுவுக்கு இதன் பின் “அமைச்சர்” என அழைக்கப்படும் ஊவா மாகாண கூட்டுறவு விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரால் நியமிக்கப்படும் மூவர் உள்ளடக்கப்பட்டிருக்கவேண்டும்.

(2) எவரேனும் ஒருவர் -

(அ) கூட்டுறவு சங்க ஊழியராக அல்லது முன்னால் ஊழியராக இருந்தால் அல்லது,

(ஆ) அமைச்சரின் கருத்தின்படி கூட்டுறவு ஊழியர்களின் சம்பளம், ஊதியம் அல்லது சேவையை அடிப்படையாக கொண்டு நிபந்தனைகளை அமைக்கும் குறிக்கோளுடன் நடாத்தப்படும் தொழிற்சங்க அங்கத்தவராக இருக்கும் ஒருவராக இருந்தால் அல்லது,

(இ) கூட்டுறவு சங்க சட்டத்தின்படி கூட்டுறவு சங்கத்தில் தற்போது பதவிவகிப்பவர், அல்லது பதவிவகித்தவர் ஒருவராக இருந்தால் அல்லது,

(ஈ) மனநிலை பாதிக்கப்பட்ட அல்லது சொத்து நஷ்டத்தை எதிர்கொண்ட அல்லது தண்டனை கோவை அடிப்படையில் அல்லது இலஞ்ச ஊழல் சட்டத்தின் அடிப்படையில் குற்றவாளியாக நீதிமன்றத்தால் தீர்ப்பு வழங்கப்பட்ட ஒருவராக இருந்தால் அல்லது,

(உ) தற்சமயம் பாராளுமன்ற உறுப்பினராக அல்லது மாகாண சபை உறுப்பினராக அல்லது உள்ளூராட்சி மன்றத்தில் உறுப்பினராக பதவி வகிக்கும் ஒருவராக இருந்தால் அல்லது,

(ஊ) கூட்டுறவு சங்கத்தில் மற்றும் கூட்டுறவு ஊழியர்களின் சட்ட நடவடிக்கை தொடர்பாக ஆஜராகிய அல்லது ஆஜராகும் சட்ட பிரதிநிதியாக அல்லது ஒழுக்கத்தை பரிசீலிக்கும் அதிகாரியாக அல்லது மேன்முறையீட்டை பரிசீலிக்கும் அதிகாரியாக இருந்தால் அல்லது,

(எ) கூட்டுறவு விடயம் தொடர்பான அமைச்சில் அல்லது திணைக்களத்தின் ஊழியராக இருந்தால் அல்லது,

அந்நபர் கூறப்பட்ட ஆணைக்குழுவில் அங்கத்தவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது இதற்கு மேலும் அங்கு பணி புரிவதற்கு பொருத்தமற்றவராக இருத்தல் வேண்டும்.

(3) கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவுக்கு நியமிக்கப்படும் அங்கத்தவர்களில் இருவர் அரச சேவையில் ஓய்வுபெற்ற வட்டார மட்டத்திலான பதவியை வகித்த அதிகாரியாக இருத்தல் வேண்டும். அத்தோடு அவர் கூட்டுறவு துறையை பற்றிய அறிவு உடையவராக இருத்தல் வேண்டும்.

6.(1) ஆணைக்குழுவின் அனைத்து உறுப்பினரும் அமைச்சரின் விருப்பு இருக்கும் வரை அல்லது ஆகக்கூடியது மூன்று வருடங்கள் பதவி வகிக்க வேண்டும். உறுப்பினரின் பதவிக்காலம்.

(2) ஆணைக்குழுவின் எவரேனும் ஒரு உறுப்பினரை அல்லது அனைத்து உறுப்பினரையும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பதவி விலக்க அமைச்சருக்கு உரிமையுண்டு.

(3) எவரேனும் ஒரு உறுப்பினர் பதவி விலகினால் அல்லது இறந்து போனால் அல்லது அமைச்சரால் முன்னர் விலக்கப்பட்டிருந்தால் அல்லது மேலே 5 (2) உப விதியின் படி தகுதியற்றவராக இருந்ததால், ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்புவதற்கான உரிமை அமைச்ருக்கு உண்டு. அவ்வாறு நியமிக்கப்படும் உறுப்பினர் அல்லது உறுப்பினர்கள் முன்னர் இருந்த உறுப்பினரின் அல்லது உறுப்பினர்களின் பதவிக் காலத்தின் எஞ்சிய காலத்திற்கு மாத்திரம் பதவி வகிக்கக்கூடியவராவர்.

(4) ஒருமுறை ஆணைக்குழுவின் உறுப்பினராக பணிபுரிந்தவரை மீண்டும் அதன் உறுப்பினராக நியமிக்கப்படலாம்.

7.(1) அமைச்சர் ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் ஒருவரை அதன் தலைவராக நியமிக்கப்படவேண்டும். தலைவராக வரும் எல்லா சந்தர்ப்பத்திலும் அவர் ஆணைக்குழு கூட்டங்களில் தலைமைத்துவத்தை வகிக்க வேண்டும். தலைவர் சமூகமளிக்காத பட்சத்தில் சமூகமளித்த உறுப்பினர்களில் ஒருவர் தலைமைத்துவத்தை ஏற்கலாம். தலைவர் மற்றும் ஆணைக்குழுவின் பணிகளை மேற்கொள்ளல்.

(2) ஆணைக்குழு சபை கூட்டத்திற்கு இரு உறுப்பினர்கள் சமூகமளித்தல் போதுமானதாக கருதப்படும்.

(3) இரு உறுப்பினர்கள் மாத்திரம் சமூகமளிக்கும் சந்தர்ப்பத்தில் ஒரு தீர்மானத்துக்கு வர முடியாத வேளையில் அவ்விடயத்தை ஆணைக்குழுவின் மூன்று உறுப்பினர்கள் சமூமளித்த கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

(4) ஆணைக்குழுவின் மூன்று உறுப்பினர்களும் சமூகமளித்த கூட்டத்தில் ஏதாவது ஒரு விடயத்தில் எடுக்கப்படவேண்டிய தீர்மானத்தில் உறுப்பினர்களுக்கிடையில் கருத்து வேறுபாடு காணப்படின் பெரும்பான்மையின் கருத்திற்கேற்ப தீர்மானம் எடுத்தல் வேண்டும். ஆனால் உறுப்பினர்கள் சமமாக இருந்தால் தீர்மான வாக்கை தலைவர் அளிக்க உரித்துடையவராவர்.

(5) ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கிடையில் பதவி வெற்றிடங்கள் இருப்பதால் அல்லது நியமிப்பது தொடர்பான குறைபாடு காரணமாக அல்லது இக்காரணங்களால் ஆணைச்சபை எடுக்கும் தீர்மானங்கள், அல்லது விதிக்கப்படும் உத்தரவுகள் மற்றும் எந்தவொரு நிபந்தனையும் இரத்துச் செய்யக்கூடாது இல்லாவிடின் இரத்துச்செய்யப்படுவதாக கருத்தில் கொள்ளக்கூடாது.

(6) இந்த நியதிச்சட்டத்தில் அல்லது அதனடிப்படையில் அமைக்கப்பட்டுள்ள ஏதேனும் ஒரு கட்டளையில் நிபந்தனைகள் விதிக்கப்படாத விடயம் தொடர்பாக ஆணைக்குழு அதன் செயல்முறைமையை நெறிப்படுத்தலாம்.

8. ஊவா மாகாண சபையின் நிதி விடயங்களுக்கு பொறுப்பான அமைச்சரின் சம்மதத்துடன் ஆணைக்குழுவின் தலைவருக்கும் அங்கு ஊழியர்களுக்கும் செலுத்தவேண்டிய ஊக்குவிப்பு மற்றும் கொடுப்பனவுகளை அமைச்சர் நிர்ணயிக்கவேண்டும். உறுப்பினர்களுக்கு ஊதியம் செலுத்துதல்.

9. (1) ஆணைக்குழுவில் செயலாளர் ஒருவர் இருத்தல் வேண்டும். அவர் இலங்கை நிர்வாக சேவையில் II ஆம் தரத்திற்கு குறையாத நிலையில் உள்ளவராக இருத்தல் வேண்டும். செயலாளர் மற்றும் ஏனைய ஊழியர்கள்.

(2) ஆணைக்குழுவிற்கு ஏனைய ஊழியர்களை மாகாண அரச ஊழியர்களிலிருந்து தெரிவு செய்யப்படவேண்டும்.

10. (1) ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டவர்கள் தங்களின் பணியை ஆரம்பிக்க முன் இங்கு ஊவா மாகாண உயர் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் இந்த நியதிச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உப விதி இலக்கம் 01 இன் படி சத்தியப்பிரமாணம் செய்து கொள்ளவேண்டும் அல்லது உறுதியளிக்க வேண்டும். ஆணைக்குழு உறுப்பினர்களினதும் ஊழியர்களினதும் உத்தியோகபூர்வ சத்தியப்பிரமாணம்.

(2) செயலாளர் மற்றும் ஊழியர் குழாமின் ஏனைய அதிகாரிகள் ஆணைக்குழுவின் தலைவர் முன்னிலையில் இந்த நியதிச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உப விதி இலக்கம் 2 இன்படி சத்தியப்பிரமாணம் செய்து கொள்ளவேண்டும் அல்லது உறுதியளிக்க வேண்டும்.

ஆணைக்குழுவின் சேர்வுகள்.

11. ஆணைக்குழுவிற்கு கீழ்க்காணும் அதிகாரங்கள் இருத்தல் வேண்டும் :-

(1) கூட்டுறவு சங்கங்களுக்கு அனைத்து ஊழியர்களை சேர்த்துக்கொள்ளல் மற்றும் மேம்படுத்துவதற்கான தொழில் நிபந்தனைகள் மற்றும் அடிப்படையான கொள்கை உள்ளடக்கப்பட்ட காரிய கிரமங்களை நிர்ணயித்தல்.

(2) தேவையான நேரத்தில் கூட்டுறவு சங்க ஊழியர்களை சேர்த்துக்கொள்வதற்கான பரீட்சைகளை நடாத்துதல் மற்றும் அவ்வாறான பரீட்சை நடாத்தப்படும் சபைகளை தெரிவு செய்தல் மற்றும் அவ்வாறான பரீட்சைக்கான கட்டணத்தை நிர்ணயித்தல்.

(3) கூட்டுறவு சங்கத்தில் எந்தவொரு பதவிக்கும் நியமனம் செய்வதற்கு இருக்கவேண்டிய தகுதிகளை நிர்ணயித்தல், எந்தவொரு வகுப்பிற்கும் அல்லது தரத்தின் பதவிக்கு, அல்லது தரத்திற்கான சம்பள முறைமையை நிர்ணயித்தல், காலத்திற்கு காலம் அவ்வாறு நிர்ணயித்த சம்பளத்தை திருத்தத்திற்கு உட்படுத்துதல், அதேபோல் ஆணையாளரிடம் கேட்டறிந்து அவ்வாறான விடயங்கள் பற்றிய தீர்மானங்களை மேற்கொள்ளல்.

(4) ஆணைக்குழு மூலம் நிர்ணயிக்கப்படும் சம்பள முறைமைகளின்படி சம்பளம் வழங்கும்படி கூட்டுறவு சங்கங்களுக்கு உத்தரவிடுதல்.

(5) கூட்டுறவு சங்கங்களால் தனது ஊழியர்களுக்கு எதிராக மேற்கொள்ளும் ஒழுக்காற்று நடவடிக்கையின்போது பின்பற்றவேண்டிய காரிய கிரமங்களை நிர்ணயித்தல், அவைகளை நடைமுறைப்படுத்தவதற்கான அதிகாரங்களை நிர்ணயித்தல் மற்றும் நிர்ணயித்த காலப்பகுதியில் ஒழுக்காற்று நடவடிக்கையை நடாத்தி முடிக்குமாறு சங்கங்களுக்கு அறிவிப்புகளை விடுத்தல்.

(6) எந்தவொரு கூட்டுறவு சங்கத்தாலும் மேற்கொண்ட ஒழுக்காற்று நடவடிக்கையின் காரணமாக தோன்றும் மேன்முறையீடுகளை விசாரித்தல்.

(7) தனது ஊழியர்களைப்பற்றி எம்மாதிரியான அறிக்கைகளை கூட்டுறவு சங்கங்கள் தன்வசம் வைத்துக்கொள்ளவேண்டும் என்பதை நிர்ணயித்தல்.

(8) ஆணைக்குழுவிற்கு ஊழியர்களைப்பற்றி தேவைப்படும் கடித கோவைகள், வேறு ஆவணங்கள் மற்றும் விபர அறிக்கைகள் குறிப்பிட்ட தினத்துக்கு முன் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கும்படி மற்றும் வழங்கும்படி எந்தவொரு சங்கத்திற்கும் உத்தரவிடுதல்.

(9) ஆணைக்குழுவிற்கு அனுப்பப்படும் மேன்றையீடு தொடர்பாக தேவையான விசாரணை பரிந்துரையுடன் ஆணைக்குழுவிற்கு அறிக்கை விடுவதற்கு மேன்முறையீடு விசாரணை அதிகாரியை அல்லது அதிகாரிகளுடனான சபையை நியமித்தல்.

(10) தனது செயற்பாடுகள் ஒழுக்காற்று விசாரணை விடயம் காரணமாக இடம்பெறும் ஒரு சங்கத்தில் எந்த ஒரு ஊழியர் மூலம் அந்த சங்கம் வழங்கிய ஒழுக்காற்று நடவடிக்கைக்கு எதிராக ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடு செய்துள்ள சந்தர்ப்பத்தில், அவ்வாறான மேன்முறையீட்டை கவனத்தில் கொண்டு சங்கத்தால் மேற்கொள்ளும் தீர்மானத்தை மாற்றுவதற்கு, இலகுவாக்குவதற்கு, இரத்துச் செய்வதற்கு அல்லது அதற்கு பதிலாக வேறொரு தீர்மானத்தை வழங்குவதற்கு அல்லது மீண்டும் விசாரணையை நடத்தும்படி உத்தரவிடுவதற்கு அல்லது அவ்வாறான ஒரு ஊழியரை மீண்டும் சேவையில் இணைத்துக்கொள்வதற்கு உள்ளடங்கலாக ஆணைக்குழுவால் வழங்கும் உத்தரவுகளை மற்றும் அவைகளில் குறிப்பிடப்பட்டிருக்கும் விதத்தில் மற்றும் ஒரு தினத்தில் இல்லாவிடின் நிர்ணயிக்கப்படும் தினத்திற்கு முன் செயற்படுத்தும் படி கூட்டுறவு சங்கங்களுக்கு உத்தரவிடுதல்.

(11) ஒழுக்கம் தொடர்பாக அல்லது வேறொரு காரணத்தினால் ஊழியரை பணி நீக்கம் செய்யப்படவேண்டுமாயின் ஊக்குவிப்பு அல்லது வேறு உபகாரக் கொடுப்பனவுகளை ஊழியருக்கு வழங்குவது தொடர்பாக கொள்கையளவில் முடிவு செய்தல்.

(12) அமைச்சரால் அமைக்கப்பட்ட நிபந்தனைகள் மூலம் நிர்ணயிக்கப்படும் பணத்தை வைப்பில் இடும்படி மேன்முறையீடு செய்தவருக்கு உத்தரவிடுவதற்கும் மற்றும் மேன்முறையீடு விசாரணை இறுதியில் கூறப்பட்டுள்ள வைப்பு பணத்தை வசப்படுத்திக்கொள்வதற்கான அல்லது மீள செலுத்துவதற்கான தீர்மானத்தை எடுத்தல்.

(13) இந்நியதிச்சட்டம் செயற்படும் போது ஒரு கூட்டுறவு சங்கம் அல்லது ஒரு வகுப்பினாலான கூட்டுறவு சங்கங்களை விடுவிப்பது தொடர்பாக ஆணையாளர் விசாரித்து அமைச்சருக்கு ஆலோசனை வழங்குதல்.

(14) மாகாண சபையின் அங்கீகாரத்தை பெற்றுக்கொண்ட பின் அமைச்சரால் விதிக்கப்பட்ட வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் கட்டளையின் மூலம், ஆணையாளர் சபைக்கு வழங்கக்கூடிய கூட்டுறவு சங்கங்களுக்கு மற்றும் அவைகளின் ஊழியர்களுக்கும் ஏற்ற வேறு அதிகாரங்களை நடைமுறைப்படுத்தல்.

(15) மேல் (6) மற்றும் (12) ம் உப பிரிவின் மூலம் ஆணைக்குழுவிற்கு வழங்கப்படும் அதிகாரங்களை நடைமுறைப்படுத்தும் போது ஆணைக்குழு மூலம் எடுக்கும் ஏதேனும் தீர்மானங்களில் உள்ள உத்தரவை மாற்றுவதற்கும் அல்லது அகற்றுவதற்கும் ஆணைச்சபைக்கு இயலும்.

12. கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் பணிகளுக்காக தேவைப்படும் நிதியை மாகாண சபை வருடாந்தம் ஒதுக்கித்தர வேண்டும். நிதி ஒதுக்கீடு.

13. (1) மேன்முறையீட்டாளர்களின் வைப்பு பணத்தில் நிதியமொன்றை ஏற்படுத்தலாம். கூறப்பட்ட நிதியத்திற்கு மேலே IIஆம் பந்தியில் (12) ஆம் உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள வைப்புப்பணத்தை வைப்பிலிடலாம். இந்நிதியத்தின் முகாமைத்துவம் ஆணைக்குழுவிற்கு உரித்துடையதாகும். நிதியம் அமைத்தல்.

(2) இந்த நிதியத்தை நிருவகிப்பதற்கு செயற்குழு நியதியை அமைத்து அமைச்சரின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள வேண்டும்.

## பகுதி II

### கூட்டுறவு சங்கங்கள் மற்றும் அவைகளின் ஊழியர்கள்

14. ஒரு ஊழியருக்கு சம்பளம் அல்லது வேறு வேதனங்களை வழங்கும் ஒரு கூட்டுறவு சங்கம் அந்த ஊழியரின் சேவை வழங்குனராக கருதப்படவேண்டும். கூட்டுறவு சங்கம் சேவை வழங்குனராக இருத்தல்.

15. ஒவ்வொரு கூட்டுறவு சங்கமும் அதன் நிதியத்திலிருந்து அந்த சங்கத்தின் ஊழியர்களின் சம்பளம் மற்றும் வேறு கொடுப்பனவுகளை செலுத்த வேண்டும். கூட்டுறவு சங்க ஊழியர்களின் சம்பளம்.

16. ஒவ்வொரு கூட்டுறவு சங்கமும் அல்லது அந்த சங்கத்தின் எந்தவொரு ஊழியராக இருப்பினும், இந்த நியதிச்சட்டத்தின் அடிப்படையில் ஆணைக்குழுவினால் விடுக்கப்படும் உத்தரவுகளுக்கு கீழ்ப்படிய வேண்டும். இந்த நியதிச்சட்டத்தின் அடிப்படையில் ஆணைக்குழுவினால் அதிகாரத்தை நிறைவேற்றுவதில் அல்லது நடைமுறைப்படுத்துவதில் விடுக்கப்படும் ஆணைக்குழுவின் அனைத்து உத்தரவுகளும் மற்றும் 11 பிரிவின் (15) ஆம் உப பிரிவுகளின் நிபந்தனைகளின் அடிப்படையில் விடுக்கப்படும் உத்தரவுகளும் நிறைவுப்பெற்ற விடயமாக இருத்தல் வேண்டும். கூறப்பட்ட கூட்டுறவு சங்கங்கள் மற்றும் அதன் ஊழியர்கள் அந்த உத்தரவுகளை பின்பற்றுவதற்கு கடமைப்பட்டிருக்க வேண்டும். கூட்டுறவு சங்கங்கள் அவைகளின் ஊழியர்கள் ஆணைக்குழுவின் உத்தரவுகளுக்கு கீழ்ப்படிய வேண்டும்.

17. ஏதாவது ஒரு கூட்டுறவு சங்கத்தின் ஊழியர் தொடர்பாக ஆணைக்குழுவால் விடுக்கப்படும் அனைத்து உத்தரவுகளும் 11 பிரிவின் (15) ஆம் உப பிரிவின் நிபந்தனைகளின் அடிப்படையில் நிறைவுப்பெற வேண்டும். அவ்வுத்தரவு சங்கத்தால் விடுக்கப்பட்டது போல் அவ் ஊழியர் பின்பற்றுவதற்கு கடமைப்பட்டிருக்க வேண்டும். ஆணைக்குழுவின் கட்டளைகளுக்கு கூட்டுறவு ஊழியர்கள் கட்டுப்படவேண்டும்.

18. இந்த நியதிச்சட்டத்தின் அடிப்படையில் ஊவா மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு நிறுவும் தினத்திற்கு அல்லது அதற்கு முன் 1972 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு யாப்பு மற்றும் அதற்குள் உள்ளடக்கப்பட்ட திருத்தத்தின் படி மீளமைக்கும் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு மூலம், 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (பலன் தரக்கூடிய நிபந்தனை) யாப்பின் படி ஊவா மாகாண கூட்டுறவு விடையத்துக்குப் பொறுப்பான அமைச்சர் மற்றும் அவர்கள் நியமிக்கப்பட்ட மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால், ஊவா மாகாண ஆணையாளர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட 1991 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க ஊவா மாகாண கூட்டுறவு சங்கம் மற்றும் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு நியதிச்சட்டம் மற்றும் அதற்கான திருத்தங்களின் அடிப்படையில் நிறுவப்பட்ட ஊவா மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால், ஊவா மாகாண கூட்டுறவு சங்கம் மற்றும் ஊழியர் விடயங்களும் செயற்படும் விதத்தில்- இந்த நியதிச்சட்டம் அமுலுக்கு வந்த திகதியிலிருந்து அதற்கு முன் செயற்பாடுகளும் செல்லுபடியாகுதல்.

(1) நிர்ணயிக்கப்பட்ட சம்பள முறைமை மற்றும் சேவை நிபந்தனைகளுடன் அனைத்து வகைப்படுத்தலும்,

(2) 1972 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு யாப்பின் பணிகளை நிறைவேற்றுவதற்கு விடுக்கப்பட்ட அனைத்து விதமான நிபந்தனைகள்,

(3) பொறுப்பேற்கப்பட்ட சகல விதமான மேன்முறையீடுகளை விசாரிப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட மற்றும் விசாரணையின் பின் உத்தரவிடுவதற்கான அனைத்து மேன்முறையீடுகள்,

(4) விதிக்கப்பட்ட அனைத்து நிபந்தனைகளும் மற்றும் வெளியிடப்பட்ட சுற்றுநிரூப நிபந்தனைகள் மற்றும்,

(5) நியமனம் செய்யப்பட்ட அனைத்து பதவி உயர்வும்.

இந்த நியதிச்சட்டத்தின் அடிப்படையில் நடத்தப்பட்ட விதத்தில் சட்டபூர்வமான அதிகாரத்துடன் செல்லுபடியாகும் அதிகாரத்தை அமுல்படுத்தவேண்டும்.

வதிவிடம் பற்றிய தகுதிகள்.

19. கூட்டுறவு சங்கத்தில் எந்தவொரு பதவியில் சேர்த்துக்கொள்வதற்கும் அவர் ஊவா மாகாணத்தில் நிரந்தரமாக 2 வருடமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும். அவ்வாறாயின் ஆணைக்குழுவின் கருத்தின்படி ஒரு கூட்டுறவு சங்கத்தில் அவ்வாறான பதவிக்கு தகுதியானவர் ஒருவரை ஊவா மாகாணத்தில் தெரிவுசெய்வதற்கு கடினமாக இருந்தால் அமைச்சரால் தயாரிக்கப்பட்ட நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின்கீழ் சங்கத்தின் மூலம் கூறப்பட்ட ஆணைக்குழுவிற்கு அறிவித்த பின் ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் அம்மாகாணத்தில் நிரந்தரமாக வதியாத தகுதியுள்ளவர் ஒருவரை நியமிப்பதற்கு கூட்டுறவு சங்கத்திற்கு அதிகாரம் இருத்தல் வேண்டும்.

கூட்டுறவு சங்கத்தின் தரத்தின்படி ஊழியர்களின் தரங்கள் மற்றும் வகுப்புகளின்படி ஊழியர் சம்பள முறைமையை நிர்ணயித்தல்.

20. கூட்டுறவு சங்கத்தில் ஒரு பதவியில் நியமிக்கப்படும் எவருக்கும் அந்த பதவிக்கான சம்பளமுறைமையை வழங்கவேண்டும். அது 25 (1) பிரிவில் குறிப்பிடப்பட்டிருப்பது போல் சங்கத்தின் தரத்தின்படி, நிர்ணயிக்கப்படும் ஊழியர் தரத்திற்கும் வகுப்பும் ஏற்றது போல் தீர்மானிக்கவேண்டும்.

ஊவா மாகாண அரச சேவையிலிருந்து செய்யலாம்.

21. இந்த நியதிச்சட்டத்தில் வேறு நிபந்தனைகளில் என்ன குறிப்பிடப்பட்டிருந்தாலும் அதிகாரமுள்ளவரின் சம்மதமும் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரியினதும் மற்றும் சங்கத்தினதும் விருப்பத்துடன் மாகாண அரச பணியில் உள்ள ஒருவரை சங்கத்தின் ஒரு பதவிக்கு ஆணைக்குழு குறிப்பிட்ட கால எல்லைக்கு உத்தரவுகள் மற்றும் நிபந்தனைகளின்கீழ் நியமிப்பதற்காக ஆணைக்குழுவிற்கு உரிமையுண்டு. இப்பிரிவின்படி நியமன அதிகாரி என குறிப்பிடப்படுவது ஊவா மாகாண அரச சேவையின் நியமனம் வழங்கும் அதிகாரியாவார்.

கூட்டுறவு சங்கத்தின் ஊழியர்களை சேவையிலிருந்து நீக்குவது மற்றும் தண்டனை வழங்குதல்.

22. (1) கூட்டுறவு சங்கத்தின் ஊழியர்களை சேவையிலிருந்து நீக்குவதற்கு வேறு விதமாக தண்டனை வழங்குவதற்கு இந்த நியதிச்சட்டத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட அல்லது தயாரிக்கப்பட்டதாக கருதும் அல்லது நிபந்தனைகளின்படி செய்யப்பட வேண்டும்.

(2) இப்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள எந்த நிபந்தனைகளிலும் இந்த ஆணைக்குழு நிறுவுவதற்கு முன் இடம்பெற்ற அல்லது தோன்றிய ஏதேனும் துர்நடத்தையால் அல்லது ஒழுக்கமீறல் அல்லது வேறு முறைப்பாடு காரணமாக அல்லது தொடர்பாக ஒருகூட்டுறவு சங்க ஊழியருக்காக எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கும் இந்த நியதிச்சட்டத்தின்படி நடத்துவதற்கும் மற்றும் நிறைவு செய்வதற்கும் தடையாக இருக்கக்கூடாது.

(3) முறையான ஒழுக்கத்துடனான நடவடிக்கையை தவிர்த்து எந்தவொரு ஊழியருக்கும் தண்டனை வழங்குவதற்கு எதிராக அந்த ஊழியரால் சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீட்டில் அல்லது அதற்கு தொடர்பான சட்டநடவடிக்கையின் போது ஊழியருக்கு நட்டஈடு, சம்பள பாக்கி, அபராதம் அல்லது வேறொரு கொடுப்பனவை சங்கம் வழங்கவேண்டும் என நிலை தோன்றினால் அதற்கு காரணமான செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் தனித் தனியாக அல்லது ஒன்று சேர்ந்து அந்த தொகையை சங்கத்துக்கு செலுத்துவதற்கு பொறுப்புடன் கட்டுப்பட்டிருத்தல் வேண்டும். இந்த தொகையை ஊவா மாகாண கூட்டுறவு சங்க நியதிச்சட்டத்தின்படி வழங்கலாம்.

*23. (1) கீழ் குறிப்பிட்டுள்ள விதத்தில் அதாவது-* *ஊழியர்களுக்கான நிபந்தனைகள்.*

(அ) கூட்டுறவு சங்கங்களில் ஊழியர் தரப்படுத்தல் வகுப்பு மற்றும் தரத்தை நிர்ணயித்தல், பதவியில் இணைத்துக்கொள்ளல், நியமித்தல், பதவி உயர்த்துதல், இடம் மாற்றம் செய்தல், பதவி விலகல் மற்றும் பணி நிறைவு செய்வது தொடர்பாக,

(ஆ) ஊழியர்களின் பணி உத்தரவு மற்றும் நிபந்தனை உத்தரவுவிட்ட வண்ணம் அல்லது ஊழியர்களுக்கு சம்பள முறைமை, கொடுப்பனவு மற்றும் ஊக்குவிப்பு செலுத்துதல், முற்பணம் வழங்கல், விடுமுறை, ஒழுக்க நடவடிக்கை மற்றும் மேன்முறையீடு தொடர்பான அல்லது பணி நிர்ணயம் மற்றும் நிபந்தனைகளுக்கேற்ப மற்றும்,

(இ) தேவைப்படும் என கருதப்படும் வேறு விடயங்கள் தொடர்பாக,

அமைச்சர் நிபந்தனைகளை அமைக்கலாம்.

(2) ஊவா மாகாண சபையின் அதிகாரத்திற்குட்பட்ட எல்லைக்குள் அமைந்திருக்கும் அனைத்து கூட்டுறவு சங்கங்களும் அதன் ஊழியர்களும் இங்கு (1) ஆம் உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு விடயம் தொடர்பாக விதிக்கப்படும் அனைத்து நிபந்தனைகளுக்கும் உட்படவேண்டும்.

*24. (1) அனைத்து கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவும் -*

(அ) அங்கு ஒவ்வொரு ஊழியர் தொடர்பாகவும் ஆணைக்குழுவால் உத்தரவிடக்கூடிய ஆவணங்கள் மற்றும் அறிக்கைகள் வைத்துக்கொள்ளவேண்டும். ஒவ்வொரு ஊழியர் தொடர்பாக ஆணைக்குழுவால் நிர்ணயிக்கப்பட்ட விதத்தில் சம்பந்தப்பட்ட சகல விபரங்களையும் அவைகளில் உள்ளடக்கப்படவேண்டும். *தனது ஊழியர்கள் தொடர்பாக கூட்டுறவு சங்கத்தின் கடமைகள்.*

(ஆ) ஆணைக்குழு ஊழியர் தொடர்பாக வழங்கப்படவேண்டும் என நிர்ணயிக்கப்படக்கூடிய அறிக்கை மற்றும் தகவல் அத்துடன் அடிக்கடி ஆணைக்குழுவுக்கு தேவைப்படும் என உத்தரவிடக்கூடிய விதத்தில் தகவல்களை வழங்கவேண்டும்.

(இ) அந்த சங்க அலுவலகங்களில் ஒரு அலுவலகத்திற்கு உட்சென்று அங்கு வைக்கப்படும் புத்தகங்கள் கணக்கறிக்கை மற்றும் ஆவணங்களை பரீட்சித்து பார்ப்பதற்கு அவைகளின் பிரதிகளை பெற்றுக்கொள்வதற்கும், அதற்கான அதிகாரம் வழங்கப்பட்ட ஆணைக்குழுவின் உறுப்பினருக்கு அல்லது அதிகாரியொருவருக்கு ஊவா மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் செயலாளரின் முன்னங்கீகாரத்துடன் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் அதிகாரியொருவருக்கு ஊவா மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் முன் அங்கீகாரத்துடன் அவ்வாறு செய்வதற்கு இடமளிக்கவேண்டும்.

## *பகுதி - III*

### ஆணையாளரின் அதிகாரம்

*25. (1)* கூட்டுறவு சங்கங்களில் ஊழியர் பதவிகளுக்கான சம்பள முறைமையை நிர்ணயிப்பதற்காகவும் கூட்டுறவு சங்கங்களை தரப்படுத்துவதற்காகவும் அந்த சங்கங்களின் ஊழியர்களின் தரத்தை மற்றும் வகுப்பை அத்துடன் ஒவ்வொரு தரத்திலான மற்றும் தரத்தில் இருக்கவேண்டிய ஊழியர்களின் எண்ணிக்கையை நிர்ணயிப்பது மற்றும் தேவைப்படும் என தான் கருதும் விதத்தில் அடிக்கடி மாற்றும் அதிகாரம் ஆணையாளருக்கு இருக்கவேண்டும். *ஆணையாளர் சங்கத்தை தரப்படுத்தவேண்டும் மற்றும் ஊழியர்களை தீர்மானிக்கவேண்டும்.*

(2) மேலே (1) ஆம் உப பிரிவின்படி ஆணையாளர் விதிக்கும் உத்தரவிற்கு முரணான விதத்தில் எந்த ஒரு கூட்டுறவு சங்கமும் எந்தவொரு நபரையும் சேவையில் இணைத்துக்கொள்ளக்கூடாது.

தகுதி, சம்பள முறைமை போன்றவைகளுக்கு ஆணையாளரின் சம்மதத்தை

26. ஆணைக்குழு கூட்டுறவு சங்கங்களின் பதவி நியமனங்களுக்கு தேவையான தகுதிகளை நிர்ணயிப்பதற்கு ஒரு தரத்தில் அல்லது ஒரு வகுப்பிற்கு ஒரு பதவிக்கு அல்லது பதவிகளுக்கான சம்பள முறைமையை நிர்ணயிப்பிற்கு அந்த சம்பள முறைமையை காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்படுவதற்கு ஆணையாளரின் சம்மதம் பெற்றுக்கொள்ளப் படவேண்டும்.

## பகுதி - IV

### ஏனைய விடயங்கள்

இடையூறுகளை அகற்றுதல்.

27. (1) இந்த நியதிச்சட்டத்தின் நிபந்தனைகளை செயற்படுத்தும்போது அதனூடாக நிபந்தனைகளை அமைக்காத அல்லது காரியசித்தியுடனான நிபந்தனைகளை அமைக்காத அல்லது ஒரு காரணமாக அல்லது ஒரு பிரச்சினை தொடர்பான சந்தேகம் அல்லது சிரமங்கள் தோன்றினால் அமைச்சர் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையின் மூலம் அச்சிரமத்தை அல்லது சந்தேகத்தை அகற்றலாம். இல்லாவிட்டால் முடிவு செய்யலாம். அவ்வாறான கட்டளையொன்றை வர்த்தமானியில் வெளியிட்ட பின் அதற்கு சட்டபூர்வமான அதிகாரம் இருக்கவேண்டும். இந்த நியதிச்சட்டத்தில் விதிக்கப்பட்டது போல் செல்லுபடியானதாகவும் அதிகாரமுடையதாகவும் இருத்தல் வேண்டும்.

(2) மேலே (1) ம் உப பிரிவின்படி ஆணையாளரின் உத்தரவிற்கு எதிராக எந்தவொரு கூட்டுறவு சங்கத்தினால் எவரையும் சேவைக்கு அமர்த்தக்கூடாது.

அமைச்சர் நிபந்தனைகள் விதிக்கலாம்.

28. (1) கூறப்பட்ட வேறு விதத்தில் நிபந்தனைகள் தயாரிக்கப்பட்டிருந்தாலே தவிர உத்தரவுகளை தயாரிப்பதற்கு இந்த நியதிச்சட்டத்தின் அடிப்படையில் அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது அல்லது நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது அல்லது ஏதேனும் விடயங்களுக்காக அல்லது தொடர்பாக அதன் அனைத்து விடயங்களையும் மற்றும் உத்தரவிட வேண்டும் என இந்த நியதிச்சட்டத்தில் பிரசுரித்து அல்லது உத்தரவிடக்கூடிய அனைத்து விடயங்களுக்கான உத்தரவுகள் உள்ளடங்களாக இந்த நியதிச்சட்டத்தில் நிபந்தனைகளை செயற்படுத்துவதற்காக அல்லது அதன் கொள்கைகளை பலப்படுத்துவதற்கு தேவையான ஆணைக்குழுவிற்கு விதிக்கக்கூடிய சகல உத்தரவுகளையும் ஆணைக்குழு தயாரிக்கலாம்.

(2) அவ்வாறான ஒரு உத்தரவுக்கு அமைச்சர் அங்கீகாரம் கிடைக்கும் வரை மற்றும் அந்த அங்கீகாரம் பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படும் வரை அமுல்படுத்தக்கூடாது. அது வெளியிடப்பட்ட திகதியில் அல்லது உத்தரவில் நிர்ணயிக்கப்பட்ட வேறொரு தினத்தில் செயற்பட வேண்டும்.

(3) (1) ஆம் உப பிரிவின் கீழ் தயாரிக்கப்பட்ட சகல உத்தரவுகளும் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின் கூடுமான விரைவில் அங்கீகாரத்துக்காக ஊவா மாகாண சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். அங்கீகரிக்காத ஒரு உத்தரவை, அந்த உத்தரவை பிறப்பித்த தினத்தில் இருந்து, ஆனால் அதனடிப்படையில் முன்னர் பிறப்பிக்கப்பட்டவைகளுக்கு எவ்வித தீங்கும் இல்லாதவாறு புறம்பாக செய்தது போல் கருதப்பட வேண்டும். ஏதேனும் ஒரு உத்தரவு புறம்பாக செய்ததாக கருதும் தினத்தை பற்றிய அறிவிப்பை வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டும்.

29. எடுக்கப்பட்ட முடிவு அல்லது செய்யப்பட்ட அல்லது செய்யப்படாத ஏதேனும் ஒரு செயற்பாடு சம்பந்தமாக அல்லது ஆணைக்குழுவின் ஒரு உறுப்பினருக்கு ஆணைக்குழுவின் அங்கத்துவ நிலையில் அந்நபருக்கு அல்லது சட்டபூர்வமாக இணைக்கப்பட்ட நிலையில் ஆணைக்குழுவிற்கு எதிராக எந்தவொரு சிவில் அல்லது குற்றவியல் சட்டநடவடிக்கையும் எடுப்பதற்கோ அல்லது நடத்துவதற்கோ கூடாது.

30. இந்த நியதிச்சட்டத்தின் நிபந்தனைகளில் என்ன குறிப்பிடப்பட்டிருந்தாலும் கூட்டுறவு சங்கம் அதன் செயற்திறன் நிமித்தம்–

(1) ஆணைக்குழுவின் முன் அங்கீகாரத்துடன் ஒப்பந்த அடிப்படையில் உறுதிசெய்யப்பட்ட பணி நிபந்தனைகளுக்கேற்ப நிபுணத்துவம் பெற்ற அல்லது திறமைசாலியை சேவையில் இணைத்துக்கொள்ளலாம்.
இல்லாவிடின்,

(2) தற்காலிக அல்லது நாட்சம்பளம் அல்லது மணிச்சம்பளம் அல்லது துண்டுகள் முறைமையில் ஊழியர்களை சேவையில் இணைத்துக்கொள்ளலாம். ஆனாலும் ஆணைக்குழுவின் சம்மதமில்லாமல் அவ்வாறான ஊழியர்களை சேவையில் நிரந்தரமாக்கக்கூடாது.

31. (1) (அ) இந்த நியதிச்சட்டத்தினை மீறுபவர்கள் ; அல்லது, தவறு.

(ஆ) ஆணைக்குழுவின் மூலம் உத்தரவிடும் ஒரு செயலை தன்னிச்சையாக கவனத்தில் கொள்ளாத அல்லது நிராகரிக்கும் அல்லது கடமையை தவறவிடும் அல்லது இந்த நியதிச்சட்டத்தின் தேவைகளுக்கேற்ப ஆணைக்குழுவிற்கு அல்லது முறையாக அதிகாரம் வழங்கப்பட்ட அல்லது வழங்கும்படி உத்தரவிடும் ஒரு தகவலை தன்னிச்சையாக கவனத்தில் கொள்ளாத அல்லது நிராகரிக்கும் அல்லது கடமையை தவறவிடும் ; அல்லது

(இ) பொய்யான அறிக்கையை சமர்ப்பிக்கும் அல்லது பொய்யான தகவலை சமர்ப்பிக்கும் ; அல்லது ஒரு கூட்டுறவுச் சங்கம் அல்லது செயற்குழு அல்லது ஒரு ஊழியர் இந்த நியதிச்சட்டத்தின் அடிப்படையில் குற்றத்திற்கு குற்றவாளியாக வேண்டும்.

(2) மேலே (1) ஆம் உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றத்தை புரியும் சகல கூட்டுறவு சங்கங்களும் அல்லது நபர்களும் நீதிபதி முன்னிலையில் நடத்தப்படும் சுருக்கமான விசாரணையின் பின் குற்றவாளியாக காணப்பட்டால் ரூபா 5,000 க்கு கூடாத அபராதத்திற்கு உட்படவேண்டும்.

(3) ஒரு கூட்டுறவு சங்கம் இந்நியதிச்சட்டத்தின் அடிப்படையில் ஒரு குற்றத்தை புரியும் போது அந்த கூட்டுறவு சங்கத்தில் சகல ஊழியர்களும் அந்த குற்றத்திற்கு குற்றவாளியாக வேண்டும். மேலும் அக்குற்றத்தை தவிர்ப்பதற்கான அனைத்த நடவடிக்கையும் தான் எடுத்ததாக அல்லது அக்குற்றம் தனக்கு தெரியாமல் நடத்தப்பட்டதாக அவர் ஒப்புக்கொண்டால் அவர் குற்றவாளியாக கருதப்படக்கூடாது.

(4) ஒரு ஊழியரை மீண்டும் சேவையில் அமர்த்தும்படி அல்லது அவ்வாறான ஒரு உத்தரவை ஆணைக்குழு வழங்கும் போது அவ்வாறான ஒரு உத்தரவை மீறி செயல்படும் காரணத்தைக்கொண்டு ஒரு கூட்டுறவு சங்கத்தை குற்றவாளியாக்கும் வேளையில் அவ்வாறான ஒரு கூட்டுறவு சங்கம் –

(அ) 31 (2) ஆம் உப பிரிவின் கீழ் விதிக்கப்படும் தண்டனைக்கு மேலதிகமாக குற்றம் செய்தபின் அக்கடமை மீறலை தொடர்ந்து செய்யும் ஒவ்வொரு நாளுக்கும் ரூபா 250/– வீதம் அபராதமாக செலுத்துவதற்கு உட்படுவதுடன்,

(ஆ) ஆணைக்குழுவின் உத்தரவுக்கேற்ப அந்த ஊழியரை சேவையில் அமர்த்தவேண்டிய நாளிலிருந்து நீதிமன்றத்தில் குற்றவாளியாக்கப்பட்ட தினத்தில் நிறைவு பெறும் நாள் வரையிலான காலம் அந்த ஊழியர் சேவையை இடைநிறுத்தாது தொடர்ந்து சேவையில் இருந்ததாக கருதி அவருக்கு சேரவேண்டிய சம்பளம் மற்றும் வேறு கொடுப்பனவுகளை செலுத்துவதற்கு உட்படவேண்டும்.

(இ) ஒரு ஊழியருக்கான சம்பளத்தை அல்லது வேறு விதமான கொடுப்பனவை அல்லது நஷ்டஈட்டுடை செலுத்தும்படி ஆணைக்குழுவால் உத்தரவிடப்பட்ட சமயங்களில் அக்கொடுப்பனவை செலுத்துவதிலிருந்து விலகிக்கொள்ளும் சங்கத்தை குற்றவாளியாக்கப்பட்ட சமயத்தில் மேலே (2) ஆம் உப பிரிவின் கீழ் உத்தரவிடப்படும் தண்டனைக்கு மேலதிகமாக ஆணைக்குழு நிர்ணயிக்கும் பணத்தையும் செலுத்துவதற்கு உட்பட வேண்டும்.

(ஈ) இந்த உப பிரிவில் (ஆ) மற்றும் (இ) பந்திகளின் அடிப்படையில் கூட்டுறவு சங்கம் செலுத்துவதற்கு உட்படும் பணம் அந்த சங்கத்தை குற்றவாளியாக்கிய நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட அபராதத்தை போல் அந்த நீதிமன்றத்தின் கட்டளைப்படி அறவிடப்படலாம்.

(5) இந்த பிரிவின் அடிப்படையில் சட்டநடவடிக்கையின்போது ஆணைக்குழுவின் முடிவு இல்லாவிடின் உத்தரவின் உண்மைத்தன்மையை கருத்திற்கொண்டு பரீட்சிப்பதற்கு அல்லது முடிவு செய்வதற்கு நீதிபதிக்கு இந்த பிரிவின் மூலம் அதிகாரம் கிடைக்ககூடாது. அதே போல் உத்தரவிடக்கூடாது.

ஆணைக்குழுவை கட்டாயப்படுத்துதல்.

32. தனது கடமை நிறைவேற்றப்படும்போது தவிர்ந்த நேராக அல்லது மறைமுகமாக அல்லது வேறு ஒருவர் மூலமாக அல்லது எவ்விதத்திலும் அல்லது ஆணைக்குழுவின் முடிவைப்பற்றி உறுப்பினருக்கு கட்டாயப்படுத்தப்படும் அல்லது கட்டாயப்படுத்துவதற்கு முயற்சி செய்யும் அல்லது சகலரும் குற்றம் புரிவதுடன் நீதிபதிக்கு எதிரில் நடைபெறும் சுருக்கமான விசாரணையின் பின் குற்றவாளியாக காணப்பட்டால் ரூபா 5,000 ஐ அதிகரிக்காத அபராதம் அல்லது ஒரு வருடத்திற்கும் மேலலல்லாத சிறைத்தண்டனைக்கு என்ற இரண்டு விதத்தில் ஒரு விதத்திலான தண்டனைக்கு அல்லது இரண்டு தண்டனைக்கும் உட்படுத்தப்படலாம்.

அனுமதியின்றி தகவல்களை வெளியிடமுடியாது.

33. ஆணைக்குழுவின் உறுப்பினர், அதன் செயலாளர், அதன் ஊழியர்களுக்குள் ஒரு உறுப்பினர் அல்லது வேறு ஒரு நபர் தனது பதவிக்கான பணியை நிறைவேற்றும் சந்தர்ப்பத்தை தவிர தனது கடமைகளின் போது தான் அறிந்துகொண்ட ஆவணத்தில் அல்லது ஞாபகக்குறிப்பில் அல்லது உள்ளடக்கப்பட்டிருந்த ஏதாவது ஒரு தகவலை வெளியிடுவதற்கு அல்லது பிரசுரிப்பதற்கு முயற்சிக்ககூடாது.

ஆணைக்குழுவின் வாய்மூல குறிப்பு சலுகைகளுக்கு உட்பட்டது என.

34. ஆணைக்குழு அல்லது ஒரு உறுப்பினர் அல்லது ஒரு ஊழியர் மற்றும் ஒரு சங்கம் அல்லது அந்தச் சங்க செயற்குழுவின் ஒரு உறுப்பினர் அல்லது ஒரு ஊழியர் அல்லது உறுப்பினர்களுக்கிடையில் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ கடமைகளை நிறைவேற்றுவது தொடர்பாக பரிமாற்றம் செய்யப்பட்ட எழுத்துமூல அல்லது வாய்மூல ஞாபகக்குறிப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயம் ஏதேனும் சட்டநடவடிக்கையில் வெளியிடப்படுவதற்கு அல்லது சமர்ப்பிப்பதற்கு ஆணைக்குழுவின் தலைவர் அவர்களின் கடித மூல அங்கீகாரம் இருந்தாலொழிய எவருக்கும் அனுமதி இருக்கக்கூடாது.

கூட்டுறவு சங்கம் மற்றும் அதன் ஊழியர்கள் தொழில் பிணக்கு சட்டத்திற்கு ஏற்புடையவர்கள்.

35. (1) தொழில் பிணக்கு சட்டத்தின் அடிப்படையில் நிறுவப்பட்டிருக்கும் தொழிலாளர் தீர்ப்பு அதிகார சபைக்கு சேவையாளர் ஒரு விடயம் தொடர்பாக அந்த யாப்பில் 3 (ஆ) அடிப்படையில் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தால் அந்த விடயம் தொடர்பாக அல்லது சாராம்சமாக அந்த விடயம் தொடர்பாக அல்லது அந்த சேவையாளர் சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீட்டை ஆணைக்குழு ஏற்றுக் கொள்ளக்கூடாது.

(2) இந்த நியதிச்சட்டத்தின் அடிப்படையில் ஒரு சேவையாளர் ஆணைக்குழுவுக்கு ஒரு விடயம் தொடர்பாக வேண்டுகோள் சமர்ப்பித்திருப்பாரேயானால் அந்த விடயம் தொடர்பாக அந்த சேவையாளர் தொழில் பிணக்கு சட்டத்தின் அடிப்படையில் நிறுவப்பட்டிருக்கும் தொழிலாளர் தீர்ப்பு அதிகார சபைக்கு வேண்டுகோள் சமர்ப்பிப்பதற்கான அதிகாரம் இருக்கக்கூடாது.

ஆணைக்குழு அதிகாரிகள் அரச ஊழியர்களாக கருதப்படவேண்டும்.

36. ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் சகல உறுப்பினர்களும் ஆணைக்குழுவின் சகல அதிகாரிகளும் மற்றும் ஊழியர்களும் தண்டனைக் கோவை சட்ட நோக்கத்துக்குட்பட்ட மற்றும் அர்த்தத்துக்குள் அரச ஊழியர்களாக கருதப்படவேண்டும்.

இலஞ்ச ஊழல் அட்டவணைப்படுத்திய நிறுவனமாக கவனத்தில் கொள்ளுதல்.

37. இலஞ்ச ஊழல் சட்டத்தின் நோக்கம் மற்றும் அர்த்தத்துக்குள் ஆணைக்குழு, அந்த சட்டத்தின் அடிப்படையில் உப அட்டவணைப்படுத்திய நிறுவனமாக கவனத்தில் கொள்ளவேண்டும்.

38. இந்த நியதிச்சட்டம் செயற்பட தொடங்கியதும் கீழ்க்காணும் நியதிச்சட்டம் செயற்படாது:- நியதிச்சட்டத்தை இரத்துச்செய்தல்.

(அ) ஊவா மாகாண சபையின் 1991 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்கம் கொண்ட கூட்டுறவு சங்கம் மற்றும் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு நியதிச்சட்டம்.

(ஆ) ஊவா மாகாண சபையின் 1992 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்கம் கொண்ட கூட்டுறவு சங்கம் மற்றும் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு திருத்த நியதிச்சட்டம்.

39. இந்த நியதிச்சட்டத்தில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில பொருள்களுக்கிடையில் முரண்பாடு தோன்றினால் சிங்கள மொழியிலுள்ள மூல வாக்கியங்கள் அமுல்படுத்த வேண்டும். தெளிவின்மை தோன்றினால் சிங்கள மூல வாக்கியம் அமுல்படுத்தப்படல் வேண்டும்.

40. சொற்கள் தொடர்பாக வேறு அர்த்தங்கள் தேவைப்பட்டாலொழிய இந்த நியதிச்சட்டத்தில் - அர்த்த நிரூபணம்.

"ஆளுனர்" என்பது ஊவா மாகாண ஆளுனர் ;

"அமைச்சர்" என்பது ஊவா மாகாண சபையில் கூட்டுறவு விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் ;

"ஆணையாளர்" என்பது ஊவா மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் கூட்டுறவு சங்க பதிவாளர்;

"கூட்டுறவு சங்கம்" என்பது கூட்டுறவு சங்கங்களுக்கான சட்டத்தின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட சங்கம் ;

"செயற்குழு" என்பது பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவு சங்கத்தின் நடவடிக்கைகள் தொடர்பான முகாமைத்துவத்தை ஒப்படைக்கப்பட்ட சங்கத்தின் நிருவாக சபை என அர்த்தப்படும், பதிவு செய்யப்பட்ட சங்கத்தில் பணிப்பாளர் சபையால் மற்றும் ஆணையாளரினால் நியமிக்கப்பட்ட நபர்கள் ;

"அதிகாரி" என்பது கூட்டுறவு சங்கம் தொடர்பாக குறிப்பிடப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அந்த சொல்லில் கூட்டுறவு சங்கமொன்றின் செயற்குழு உறுப்பினர்கள் செயலாளர் மற்றும் நிறைவேற்று அதிகாரிகள் ;

"ஊழியர்" என்பது கூட்டுறவு சங்கமொன்றில் நியமனம் பெற்று சம்பளம் அல்லது கொடுப்பனவு ஊதியம் பெறும் மற்றும் தீர்மானமான கடமைகளை வழங்கப்பட்ட ஊழியர் என அர்த்தபடுத்தப்படுகிறது.

## அட்டவணை இலக்கம் - 01

ஊவா மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் தலைவரால்/உறுப்பினரால் ஊவா மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் நியதிச்சட்டத்தில் 10 (1) ஆம் பிரிவின் படி சத்தியபிரமாணம் செய்தல் உறுதிமொழி வழங்கல்.

ஊவா மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் தலைவராக/உறுப்பினராக நியமனம் வழங்கப்பட்டுள்ள ........................................................................................................................................................................ ........................................... ஆகிய நான் எனக்கு வழங்கப்பட்டுள்ள ஊவா மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் தலைவர்/உறுப்பினர் பதவிக்கான கடமைகளை பக்தியுடனும், பக்கசார்பற்ற முறையிலும், மனித நேயத்துடனும், பகை உணர்வில்லாமலும், முழுமையாகவும், நேர்மையுடனும், நியாயமாகவும் நிறைவேற்றுவேன் என்றும், எனது கடமைகளை நிறைவேற்றும் போது மேலே குறிப்பிடப்பட்டுள்ள பதவிக்கு உரித்தான கடமைகள் தொடர்பான எந்தவொரு விடயம் தொடர்பாக நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ எந்தவொரு நபருக்கும் வெளியிடமாட்டேன் என நேர்மையுடனும் கம்பீரத்துடனும் கூறி சத்தியப்பிரமாணம் செய்கிறேன்/உறுதி மொழி வழங்குகிறேன்.

-----,
கையொப்பம்.

20........... ஆம் வருடம் ..................... மாதம் ......................... திகதி என் முன்னிலையில் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது/உறுதிமொழி வழங்கப்பட்டது.

-----,
மாகாண உயர்நீதிமன்ற நீதிபதி.

**அட்டவணை இலக்கம் - 02**

*ஊவா மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் செயலாளரால்/உறுப்பினரால் ஊவா மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைச்சபையின் நியதிச்சட்டத்தில் 10 (1) ஆம் பிரிவின் படி சத்தியபிரமாணம் செய்தல் உறுதிமொழி வழங்கல்.*

*ஊவா மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் செயலாளராக/ஊழியராக கூறப்பட்ட பதவியின் கடமைகளை செய்வதற்கு பணிக்கப்பட்டுள்ள ........................................................................................................................................ ஆகிய நான் எனக்கு வழங்கப்பட்டுள்ள ஊவா மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் செயலாளர்/ஊழியர் பதவிக்கான கடமைகளை நிறைவேற்றுவதை தவிர வேறு எந்த விதத்திலும் கூறப்பட்ட பதவியில் கடமை புரியும்போது நான் அறிந்துகொண்ட ஆவணங்களிலுள்ள, ஞாபகக்குறிப்புகளிலுள்ள தகவல்களை முழுமையாக அல்லது ஒரு பகுதியை நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ எந்தவொரு நபருக்கும் வெளியிடமாட்டேன் என நேர்மையுடனும் கம்பீரத்துடனும் கூறி சத்தியப்பிரமாணம் செய்கிறேன் உறுதி மொழி வழங்குகிறேன்.*

-----,
கையொப்பம்.

*20........... ஆம் வருடம் ..................... மாதம் .......................... திகதி என் முன்னிலையில் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது/உறுதிமொழி வழங்கப்பட்டது.*

-----,
(தலைவர்)
உவா மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு,
பதுளை.

10-729

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.